
www.tamilarangam.net

# தேனீ

THENEE
யூலை 1991



Dana 91

அராஜகத்தின் ஆட்சியில்
மௌனித்தும்
மரணித்துப் போகும்
மனிதம்
மீண்டும் மீண்டும்
துளிர் விடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள்

தொடர்கதையாகத் தொடரும் கிழக்கு மாகாணப் படுகொலைகளில் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் உச்சக் கட்டமாக அமைந்துள்ளது.

இனவாத இலங்கையரசின் தமிழ் பேசும் மக்களிற்கெதிரான இனவொழிப்பு நடவடிக்கைகளின் பிரதான தாக்குதல் இலக்காக விளங்கி வரும் கிழக்கு மாகாணமாகும். அப்பாவி மக்கள் விசாரணையின்றி கைதுசெய்யப்படுவது, வெட்டிக் கொலைசெய்யப்படுவது, சுடப்படுவது என்பனவெல்லாம் கிழக்கிலங்கையின் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன. இது இன்றல்ல நேற்றல்ல அரசின் இனவொழிப்புக் கூர்மையாக்கப்பட்டதிலிருந்து அதாவது எட்டு வருடங்களுக்கு மேலாக இன்னும் சொன்னால் அரசின் இனவொழிப்பிற்கு அப்பாவி மக்கள் இலக்காவதற்கான பிரதான குறியீடாக விளங்குவதும் இம்மாகாணமே.

உண்மையில் அது இலங்கை அரசின் இனவொழிப்பை நடைமுறைப்படுத்துவதற்காக அதன் பல்வேறு விதமான கூலி மிருகங்களின் வேட்டை பூமியாகவே திகழ்கின்றது இந்த நிமிடம் வரை. கிழக்குமாகாணத்தில் கடந்த சில மாதங்களாக காணாமல் போகப் பண்ணுவதிலிருந்து கடத்திச் சென்று தலைகளை வெட்டிக் கொலை செய்வது வரை பல தமிழர்கள் அரச படைகளினால் கொல்லப்படுவது தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. தமிழர்கள் எந்தநேரமும் படைகளினாலும் கேள்வியின்றி கைது செய்யப்படுவது நாளாந்த நிகழ்வுகளாகவிருந்தன. அச்சமும் பீதியும் அங்கு நிலவியிருந்த வேளையில்-

யூன் மாதம் 12 ந் திகதி, கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினர் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த ட்ரக்டர் வண்டியொன்று நிலக்கண்ணி வெடிக்கிலக்கானது. இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் வழமைபோலவே அதன் விளைவுகள் எதிரொலிக்கத் தொடங்கின.

கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மகிழடித்தீவு, முதலைக்குடா ஆகிய கிராமங்களின் மீது பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர். 12,13 திகதிகளில் அந்த அநீதியும் குரூரமும் நிறைந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

ஈனவிரக்கமின்றி அப்பாவி மக்களின் மேல் நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் அரசின் இனவொழிப்பின் உச்சமாகவும் மன்னிக்கவே முடியாத மனித விரோதச் செயலாகவும் ஒடுக்கப்படுகின்ற மக்களின் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.

வெடிச்சத்தங்களைக் கேட்டு தமது வீடு வாசல்களை விட்டு அயற்கிராமங்களை நோக்கி மக்களில் சிலர் தப்பி ஓடி ஒளிந்து கொண்டனர். மீதமிருந்தவர்கள் அனைவர் மீதும் வெறித்தனமான கொலை தாக்குதல் நடத்தினர் அரச படையினர். இந்த மண்ணில் அப்பாவிமக்களைக் கொல்ல ஆயுதமேந்திய யாருக்குத்தான் விருப்பம் வரவில்லை?

இந்த மக்களின் உயிர்களைப்பற்றி அரசபடைவெறியர்களிற்கும் அக்கறையிருக்கவில்லை கண்ணிவெடிவைத்து ஒளிந்து கொண்ட புலிகளுக்கும் அக்கறையிருக்கவில்லை.

கொக்கட்டிச் சோலையில் பலமுறை அப்பாவி மக்களின் பலியெடுப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல இம்முறைச் சம்பவங்கள் அமைந்துள்ளன. இது ஒரு தற்செயல் பழிவாங்கல் நடவடிக்கையேயல்ல, குரூரமான இனவொழிப்பின் ஒரு பகுதியே இதுவாகும்.

இச்சம்பவங்களின் போது இராணுவத்தின் கண்ணில் பட்டவர்கள் ஒன்றில் சுட்டுக்கொல்லப்பட்டனர் அல்லது கதறக்கதற வெட்டிக் கொல்லப்பட்டனர்.

சம்பவநேரம், இயங்கிக் கொண்டிருந்த பள்ளிக்கூடமொன்றில் உயிர்தப்பும் நோக்கில் ஒடிப்பதுங்கிய மக்களில் 17 பேரை அழைத்துச் சென்று சுட்டுக் கொன்றது இராணுவம். ஒரே வீட்டிற்குள் சென்று பயத்தினால் பதுங்கிய பல குடும்பங்களில் சிலர் வெட்டியும் சிலர் சுட்டும் கூட்டாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

கூட்டாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் அச்சமும், குரூரமும் ஆட்சி செய்த பயங்கர மணித்தியாலங்கள் அவை. மகிழடித்தீவில் சிறியதோர் அரிசி அலைக்குள் ஓடிச்சென்று ஒளிந்த 38பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அங்கு நடைபெற்ற இன்னொரு அநியாயம் இது. ஒரு வீட்டிற்குள் வெட்டுக்காயங்களுடன் இறந்திருந்த சடலங்களின் மத்தியில் குற்றுயிராகக் காயங்களுடன் உயிரிற்காகப் போராடிக்கொண்டிருந்தது ஒரு ஒன்பது வயது குழந்தை. அந்த வீடு இராணுவமுகாமிற்கு முன்பாக இருந்தது. இராணுவமுகாமிலிருந்து வீட்டைப்பார்க்க முடியுமென்பதனால் விளைவுகளுக்கஞ்சி குழந்தையைக் காப்பாற்ற எவருமே முன்வரவில்லை. அதன் உயிர்ப்போராட்டம் சில நிமிடங்களில் அடங்கிவிட்டது.

கொலைவெறியர்களின் கண்ணில் பட்ட பாடசாலை மாணவிகள் உட்பட பெண்களில் சிலர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவவெறியர்கள் கூட்டம்கூட்டமாக பெண்களின் மீது பாலியல் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்தனர். அதாவது ஒவ்வொரு பெண்ணும் மாறிமாறி ஒன்றுக்கு மேற்பட்ட இராணுவ மிருகங்களினால் பலாத்காரப்படுத்தப்பட்டாள்.

இவை மட்டுமா?

சில பெண்களை சிலர் கால்களில் பிடித்திருக்க கத்தியால் அவர்களது உடல்கள் குத்தப்பட்டுள்ளன.

பலாத்காரத்திற்குள்ளான பெண்களில் சிலர்(உயிர்தப்பியோர்) உடல், மன நிலை பாதிப்புக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களின் சிலரின் உடலெங்கும் வலித்துக் கொண்டிருக்கும் மோசமான சாப்பாத்துக்காயங்கள். இராணுவ மிருகங்கள் ஏறிமிதித்தனவாம்.


எது நடந்தாலும் வெளியே தெரியாத கிழக்குமாகாணத்தில் அப்பாவிகளின் மேல் நடாத்தப்பட்ட மன்னிக்க முடியாத கொடுமை இது.

அப்பாவி மக்களின் மீது இத்தனை கொடுமைகளையும் நிகழ்த்தியிருக்கும் இலங்கையரசின் இராணுவ வெறிப்படைகளை, கிழக்கு மாகாணத்தில் இதற்கு முன்னரே இதே விதமான குரூரங்களை அப்பாவி மக்களிற்கெதிராக நிகழ்த்தியிருக்கும் அரச இராணுவப்படைகளை, இன்னமும் 'பாதுகாப்பு படைகள்' என விளித்து சில தமிழர் தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுவது மாத்திரமின்றி "பாதுகாப்புப்படையினர் மக்களைக் காக்க வேண்டியவர்கள்" எனப் பேசுவதும் "அரசாங்கம் உடனேயே தவறு செய்த இராணுவத்தினரை இடமாற்றம் செய்யவேண்டும்" (வேறு இடத்தில் இதே தவறை இராணுவம் செய்தால் பரவாயில்லையா?) என்றும் சில தமிழர் தரப்பு பா.உக்கள் பேசிவருவதானது கேலிக்குரியதும் மாத்திரமல்ல கேவலமானதுமாகும்.

நடந்த சம்பவங்களை சாதாரணமானவையாகவும், தற்செயல் விபத்தாகவும் கணித்து அவற்றை வெறும் ஒழுங்கு நடவடிக்கைகளால் தீர்க்கலாம் எனவும், படைகள் இனியும் இப்படியான தவறுகளை விடக்கூடாது என செல்லகமாகக் கண்டித்தும் இக்கட்சிகள் அறிக்கை விடுவதானது இனவொழிப்பு அரசியலையே இந்த நிமிடம்வரை நடாத்தும் இலங்கை அரசுடன் தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக அரசியல் ரீதியில் ஒத்துழைப்பு வழங்கி தமது இருப்புக்களை மாத்திரம் கருத்திற்கொண்டு அரசை அரசியல் ரீதியாகப் பாதுகாப்பதையே இவைகள் செய்கின்றன. அதாவது அரசின் இனவொழிப்பு அரசியலை இவை மறைமுகமாக ஆதாரிக்கின்றனர்.

இப்படுகொலைச் சம்பவங்களின் போது சுமார் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனத்தெரியவந்துள்ளது. 450க்கும் மேற்பட்ட வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளனவென செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் புகார் வந்துள்ளது. காயமடைந்த பலரை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு உடன் எடுத்துச்செல்ல போதிய வசதிகள் இருக்கவில்லை. போக்குவரத்து வசதிகள் சீரழிந்த நிலையிலேயே அங்கிருக்கின்றன. இதனால் அவர்களை காலந்தாழ்த்தியே ஆஸ்பத்திரியில் சேர்க்கமுடிந்தது. ஆனால் ஆஸ்பத்திரியிலும் சத்திரசிகிச்சை வசதிகள் எதுவுமே இல்லாததால் அவர்களை பொலநறுவைக்கு எடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. இச்சம்பவங்களைத் தொடர்ந்து புலிகளைத் தேடுகின்றோம் என்று இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேடுதல் நடாத்துகின்றனர். இதனால் அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அங்குள்ள மக்கள் பட்டினியால் வாடுவதாகவும் அப்பகுதிக்கு உணவுப்பொருட்களை எடுத்துச் செல்ல முடியாமலிருப்பதாகவும் செஞ்சிலுவைச்சங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

www.tamilarangam.net



# ரீங்காரம்

தமிழ் மக்களின் வரலாற்றில் கறுப்புத்தினங்கள் தான் அதிகம் போலும்.
யூன் மாதம் 12 ஆம் திகதிகளில் நடைபெற்ற கிழக்கு மாகாணக் கொக்கட்டிச் சோலைப்படுகொலைகள் மேலும் கறைபடிந்த கறுப்புத்தினங்களை உருவாக்கியுள்ளன.
சிங்கள இனவெறி காடையர்களின் அப்பாவித் தமிழ் மக்களிற்கெதிரான கொலை நடவடிக்கைகளின் போதும்,
தமிழ் இனவெறியர்களின் அப்பாவிச் சிங்கள மக்களிற்கெதிரான படுகொலைச் செயல்களின் போதும்,
முஸ்லிம் இனவாதிகளின் அப்பாவித் தமிழ் மக்களிற்னெகதிரான கொலைவெறி நடவடிக்கைகளின் போதும்,
தமிழ் இனவெறியர்களின் அப்பாவி முஸ்லிம் மக்களிற்கெதிரான படுகொலைகளின் போதும்,
இவை தவிர அரசின் கொலைப்படைகள் அப்பாவித் தமிழ் மக்களிற்கெதிரான படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடுகையிலும்,
அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான மனித வேட்டைகளின் போதும்,
கிழக்கு மாகாணமே கொலைக்களமாக விளங்கி வருகின்றது. எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும் "அப்பாவி மக்கள்" எனும் பதத்தில் அடங்குபவர்களே கொலையுண்ணுகிறார்கள், பாதிக்கப்படுகிறார்கள் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல.
இலங்கையின் இனப்பிரச்சனையையும் அரசின் இனவொடுக்கு முறையையும் ஆணிவேராகக் கொண்டே திகழ்ந்துவரும் இவ்வனர்த்தங்களிற்கான முற்றுப்புள்ளியானது இவ்வொடுக்கு முறையைச் செயற்படுத்தும் அரசின் நிரந்தர முடிவொன்றின் பின்னரே சாத்தியமென்பது கடினமானதோர் உண்மை. ஏனெனில் இது தொடர்ந்தும் இனவொடுக்கல் அரசியலையே மாறாமல் கடைப்பிடிப்பதனால், இந்த அரசாகவிருந்தாலும் சரி, இனவொழிப்பு அரசியலைக் கடைப்பிடித்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்காத எந்த அரசு ஆட்சியிலிருக்கும் வரைக்கும் கிழக்குமாகாணம் பல்வேறுவிதமான கொலைக்களமாக தொடர்ந்தும் இருக்கும் என்பதே அபாயகரமான உண்மையாகும்.
"இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியிலான தீர்வொன்றைக் காணவே அரசு விரும்புகின்றது" என்ற பொய் வெளிப்படையாக அரசுதரப்புகளில் கூறப்பட்டு வரும் அதேநேரம், எந்தவிதத்திலேனும் தமிழ் மக்களின் அடிப்படை சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்கக்கூடாதென்பதில் அரசு மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனமாகவே நடந்து வருகின்றது, சுயநிர்னய உரிமையை மறுப்பதுவும் அரசின் இனவொடுக்கல் அரசியலின் ஒரு பகுதியேயாகும். தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைகளிற்கும் இனப்பிரச்சனைக்குத் தீர்வினை அளிப்பதற்குமான சரியான போராட்டமொன்றில்லாத சூழ்நிலையில் அரசின் மனிதப் படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் முதன்மைப்படுத்திப் பரவலான பிரச்சாரச் செயற்பாடுகளின் மூலம் அரசிற்கான எதிர்ப்புணர்வை சாதாரண மக்கள் மத்தியிலும் சர்வதேச ரீதியாகவும் செயற்படக்கூடிய மனித உரிமை அமைப்புக்கள் தோற்றுவிக்கப்படுவதும், இவற்றின் மூலம் முழு இலங்கை சாதாரண மக்களின் பிரதான எதிரியான சிறிலங்கா அரசின் உண்மையான வடிவத்தினையும் இனப்பிரச்சனைத் தீர்விற்கான சரியான போராட்ட வடிவத்தினையும் தெளிவுபடுத்துவது அவசியம்.

சாதாரண மக்களெனுமிடத்து, நாள்தோறும் யுத்த சூழ்நிலைகளில் மரணத்துடனும், பட்டினியுடனும் போராடிக்கொண்டும், அகதிகளாக அலைந்தபடியும், தமது கருத்துச் சுதந்திரத்தையும் முற்றாகப் பறிகொடுத்தும் இருக்கும் வடகிழக்கு சாதாரண மக்களிடையே வெளிப்படையான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுவது கடினமானதாகவே இருக்கின்றது. மாற்றுக் கருத்து தெரிவிப்பதற்கான உரிமை அங்கு முற்றாக இல்லாத நிலை வில்வரூபம் எடுத்துள்ளது. எனினும் இந்த நிமிடம் வரை அரசின் ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் மக்களிடையே அரசிற்கெதிரான எதிர்ப்புணர்வு என்பது ஒன்றும் புதிதாகக் காட்டப்படவேண்டிய ஒன்றல்ல. ஆனால் அதை சரியான திசை வழியில் அணுகமுடியாத வகையில் இன்றைய யதார்த்த நிலை அமைந்துள்ளது.

சாதாரண தமிழ் மக்களின் தலைகளுக்கு மேல் விமானக்குண்டுகளைப் பொழியும் அரசிற்கெதிராக அவர்களிடமிருக்கும் எதிர்ப்புணர்வைப் போலவே அவர்களினது குரல்வளையின் மீது துவக்குகளைப் பதித்திருக்கும் புலிகளின் மீதும் வெளிக்காட்ட முடியாத எதிர்ப்புணர்வு சாதாரண மக்களிடத்தில் இருக்கின்றதென்பதை, எந்தவிதத்திலேனும் மக்களின் கருத்துச் சுதந்திரம் வெளிவர கூடாதென்பதில் புலிகளின் தலமை கவனமாகவிருப்பதில் இருந்தும் அதற்கான அவர்களின் நடவடிக்கைகளின் மூலமும் காணமுடிகிறது. புலிகள் குறுந்தேசியவாதத்தை முன்னிறுத்தி தமது அயுத சர்வதிகாரத்தை மக்கள் மீது நிலைநாட்டி வருவதற்கான எண்ணெய் ஊற்றும் காரணியாக அமைந்திருக்கும் இனவாத அரசியலை முடுக்கிவிடும் சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல தென்னிலங்கை வாழ் சாதாரண சிங்கள மக்களினதும் பிரதான எதிரிவென்பது எவ்வளவுதான் அரசின் இனவாத பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டுள்ள போதும் அரசினால் பலவகையாகப் பாதிக்கப்படும் சாதாரண மக்களிடமும் லட்சகணக்கான தொழிலாளர்களிடையும் எதிர்ப்புணர்வாகவிருக்கிறது என்பது பொய்யில்லை.

சிறிலங்கா அரசு தனது அரசயந்திரத்தை பலமாக ஸ்தாபித்திருக்கும் தென்னிலங்கையில் அணிதிரட்டப்பட்ட தென்னிலங்கை மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பங்களிப்பின்றி அரச யந்திரத்தை பலமிழக்கச் செய்வதென்பது சாத்தியமில்லை. அடிமட்ட சாதாரண சிங்கள மக்களிடையே அரசின் மனிதஉரிமை மீறல்களை முன்னிறுத்தி, மனித உரிமைக் குழுக்களின் மூலம் தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவர்களின் சுயநிர்ணய உரிமை பற்றி கருத்துக்களைத் தெளிவாக்கியும், அனைத்து மக்களினது பிரதான எதிரியான இலங்கையரசிற்கெதிரான ஒன்றினைந்த கருத்துப் பலத்தை ஒரு தொலை நோக்கின் அடிப்படையில் கட்டியெழுப்ப வேண்டும். இலங்கை முழுவதும் உள்ள தற்போதைய நிலமையில் மனித உரிமைக் குழுக்களின் மூலமாகவே சாதாரண மக்கள் மத்தியில் இக்கருத்துக்களை கொண்டு சென்று செயற்படுத்தலாம் என்பது உண்மை.

மனித உரிமைகள் அமைப்புகள் என்று சொல்லும் போது ஏற்கனவே உள்ள மனித உரிமை அமைப்புக்களையும் சேர்த்தே இங்கு கருதப்படுகிறது . ஆனால் சிற்சில எல்லைகளுக்குட்பட்ட சில அமைப்புகளின் மூலமாக சரியான செயற்பாடுகளை மேற்கொள்வது நடைமுறைக்கொவ்வாது என்பது கருத்திற் கொள்ளப்படவேண்டும். உதாரணமாக நாடு தழுவிய ரீதியாக வெகுஜனப் போராட்டங்களை நடாத்தவும், மனித உரிமைக்கு குரல் கொடுக்கும் அமைப்பாகவும் செயற்படக் கூடியதாகவிருந்த அன்னையர் முன்னணி, அதன் தலமையின் வர்க்க குணாம்சம் காரணமாய் அரசு சார்பாகவும், ஏனைய சிங்கள தேசியவாத கட்சிகளின் அரசியல் இலாபங்களிற்கான பகடைக்காயாகவும் போய்விட்டது. இதனால் சாதாரண மக்களின் வெகுஜனப் போரட்டங்களை அணிதிரட்டமுடியாத கையாலாகாத அமைப்பாய் இது முடங்கியுள்ளது. மேல்மட்டங்களில் செயற்கையாக உருவாக்கப்படும் அமைப்புக்களின் நோக்கங்கள் எப்பொழுதும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இவை தமது வர்க்கக்குணாம்சங்களிற்கேற்ப சில எல்லைகளைக் கடந்து அரசிற்கெதிராக செயற்படமாட்டார்கள் என்பதே உண்மை. ஆனால் எமக்கு இன்று தேவை பிரதான எதிரியான இலங்கையரசிற்கெதிரான சாதாரண மக்களின் மத்தியில் செயற்படுத்தப்படும் நாடு தழுவிய மனிதஉரிமைக்குழுக்களின் முன்னெடுப்புக்களே.

இத்தகைய செயற்பாடுகளின் போது பலதரப்பட்ட அரச எதிர்ப்புச்சக்திகள் ஒன்றாக அணிதிரள வாய்ப்புக்கள் உண்டு. இந்நடவடிக்கைகள் பலம்பெறும் தருவாயில் யார் அரசின் உண்மை எதிரிவென்பதையும் தமது வர்க்க குணாம்சங்களுக்கேற்ப இந்நடவடிக்கைகளிலிருந்து விலகிக்கொள்ளும் சக்திகளையும் இணங்காணமுடியும்.

தென்னிலங்கையில் இத்தகையதொரு கருத்துப்பலமும், எதிர்ப்பியக்கமும் சாதாரண மக்களிடையே பலமாக வளரும் சூழ்நிலமையில் வடகிழக்கு சாதாரண மக்களிடையேயுள்ள எதிர்ப்புணர்வுகளும் மனோவலிமையுடன் அணிதிரளுமென்பதில் சந்தேமில்லை. நாடு முழுவதிலுமுள்ள மனிதஉரிமைகளுடன் சார்ந்த அரச எதிர்ப்பு நடவடிக்கைகளிற்கான பிரச்சாரம் சமகாலத்தில் சர்வதேச ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு, அரசை அம்பலமாக்கும் பணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்படுத்தப்படவேண்டும். நாட்டில் நடைபெறும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பலம் சேர்க்கும் வகையில் தொடர்ச்சியான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும். இங்கு முக்கியமானது என்னவெனில் மனிதஉரிமை மீறல்களை அரசு மாத்திரமல்ல எந்த சக்தி மேற்கொண்டாலும் அம்பலப்படுத்தவேண்டிய கட்டாயமும் கடைபிடிக்கப்படவேண்டும்.

இன்று அடிப்படை ஜனநாயகத்திற்காகவோ அல்லது மனித உரிமைகளுக்காகவோ குரல் கொடுக்க கூடிய சுயாதீன அமைப்பொன்றையோ தனிநபரையோ ஆயுதத்தால் நசுக்கக் காத்திருக்கும் புலிகளின் தலைமையின் குணாதிசயமானது வடகிழக்கில் மாத்திரமல்ல இலங்கை முழுவதும் மக்கள் சார்ந்த எந்த முன்னெடுப்நக்கும் வருங்காலங்களில் சவாலாக இருக்குமென்பது உண்மை. தமது குழுவாதத்தினாலும், இராணுவ மேலாதிக்கத்திற்காகவும் மாத்திரமே புலிகள் ஆயுத சர்வதிகாரத்தை கடைப்பிடிக்கவில்லை என்பதும் மூன்றாம் உலக நாடுகளில் ஏகாதிபத்திய நலன்களைப் பேணுவதற்கும் அங்கு ஏற்படும் எழுச்சிகளை அடக்குவதற்கும் தமது எதிரிகளை ஒழிப்பதற்கும் ஏகாதிபத்திய நாடுகளினால் ஒவ்வொரு நாடுகளிலும் வளர்க்கப்படும் மக்கள் விரோத கூலிக்குழுக்களின் வரிசையில் அவர்களது நேரடி ஏஜென்டுகளாக செயற்படும் வளர்ப்பு பிராணிகளாகவே புலிகளின் தலமை செயற்பட்டு வருகின்றது என்பது பலரும் ஏற்க மறுக்கும் உண்மையாகும்.

இந்த வகையில் வருங்காலத்தில் இலங்கையில் மக்கள் சார்ந்த எந்த முன்னெடுப்பு செயற்படுத்தப்பட்டாலும் அவை ஏகாதிபத்திய சக்திகளுக்கு பாதகமாகவிருக்கும் பட்சத்தில் அவர்களுக்காக அதை நசுக்கும் பணியில் கொண்டுரால், சர்வதேச மாபியா குழுக்களின் பாணியிலேயே 'விசுவாசமாக' புலிகள் செய்துமுடிப்பார்கள் என்பதை இன்றைய நடவடிக்கைகளிலிருந்து கண்டு கொள்ளலாம்.

ஏகாதிபத்திய சக்திகளின் ஆதரவாளர்கள் என்பதில் புலிகளின் தலைமைக்கும் இலங்கையரசிற்கும் ஒற்றுமையிருக்கின்றது. இன்று சாதாரண சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் கால்களை ஊன்றுவதற்காகவே இருவருக்கும் தேசிய, குறுந்தேசிய மூகமூடிகள் தேவைப்படுகின்றன. சாதாரண மக்கள் எழுச்சிகள் முனைப்பாக எழுகையில் இவர்கள் வெளிப்படையாக கூட்டுச் சோர்ந்து ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்புக்கள் உண்டு.

அரசிற்கெதிரான சரியான போராட்ட சக்திகள் இனங்காணப்பட்டுக்கொண்டிருக்கும் சமய்த்தில் ஏனைய தமிழ் குழுக்களான ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், டொலோ, புளொட் ஆகிய குழுக்கள் தமது இன்றைய அரசியல் இருப்பை மாத்திரம் கருத்திற்கொண்டு மக்களை ஒடுக்கும் இனவாத அரசினை ஆதரித்து அரசியல் பலம் சேர்ப்பதிலேயே ஈடுபடுகின்றன. புலிகளை எதிர்ப்பதென்பது இந்த அரசுடன் சேர்ந்து செய்யப்படவேண்டிய ஒன்றல்ல. மக்களிடையே செயற்படுத்தப்படவேண்டிய அடிப்படை நடவடிக்கைகளில் நம்பிக்கையற்று அரச சார்பு மக்கள் விரோத

www.tamilarangam.net

செயற்பாடுகளை செய்வதன் மூலம் தமது வர்க்க குணாம்சங்களுக்கேற்ப அரசுக்கெதிராக மக்களை அணிதிரட்டி செய்ய வேண்டிய போராட்டங்களிலிருந்து என்றென்றுக்கும் அன்னியப்படுகிறார்கள்.
ஈ.பி.டி.பி, புளொட், டெலோ ஆகியவை நேரடியாகவே அரசபடைகளுடன் செயற்படுகின்றன. அன்மைய கொக்கட்டிச்சோலை படுகொலைகளின் போது ஈ.பி.ஆர்.எல். எப் பா.உவான பிரேமச்சந்திரனின் அறிக்கையில் " அரசபடைகள் மக்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள். படைகள் இவ்வாறு நடந்து கொண்டால் புலிகளுக்கும் படைகளுக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடும்" என்று அரசு தரப்பாகவே குறிப்பிட்டார். அரசு நல்லது படைகள் தான் கூடாது என்று அறிக்கை விடும் இவர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக இனவாத அரசிற்கெதிராக போராடமுடியாத சமரச் முதலாளித்துவ கட்சிகளாக உருமாறியுள்ளன.
இந்தநிலையில் அரசினால் தொடர்ச்சியாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களுக்கெதிரான படுகொலைகளை தொடர்ந்தும் வெளியுலகில் பிரச்சாரப்படுத்தி மனித உரிமை மீறல்கள் மக்கள் சார்பானதாக வெளிக்கொணரப்படவேண்டும் என்பதே தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு அத்திவாரமாகும்.

தேனீக்கள்

---

## தேனீயின் புதிய முகவரி

**தேனீ**
இரு மாதங்களுக்கொருமுறை வெளிவருகின்றது.

| | |
|---|---|
| ஆசிரியர் குழு | தேனீக்கள் |
| தனிப்பிரதி | 4 டீ.எம் |
| வருடசந்தா | 20 டீ.எம் |

ஆக்கங்கள், சந்தா மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும்:

THENEE
C/O: SALZ,
WAIBLINGER STR.59,
7000 STUTTGART 50,
GERMANY.

THENEE
SparKonto Nr. 2300174892
BLZ. 600 501 01
Landesgirokasse,
7000 Stuttgart 1



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுமி



ஜமிகா கின்கேயிட்

வெள்ளைநிற உடுப்புக்களைத் திங்கட்கிழமைகளில தோய்ச்சு கல்லுக்குவியலுக்கு மேல் காயப்போடவேண்டும்; நிறமான உடுப்புக்களை செவ்வாய்க்கிழமைகளில தோய்ச்சு துணிகள் காயப்போடும் கொடியில போடவேண்டும்; கடும் வெயிலில தலையை மூடாமல் போகவேண்டாம்; பூசனி பிறிட்டலை சுடு சூடிய இனிப்பான எண்ணெய்யில சமைக்கவேண்டும்; உன்னுடைய உள்ளாடைகளைக் கழற்றிய உடனேயே ஊறப்போடவேண்டும்; உனக்கொரு வடிவான மேல்சட்டை தைக்கப் பருத்தி வாங்கும்போது, அவற்றில பிசின் இல்லாதபடி கவனித்துக்கொள், அல்லாவிட்டால் தோய்ச்ச பிறகு வடிவாக இருக்காது; கருவாடு சமைக்க முதல் இரவே ஊறப்போடு; நீ ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடத்தில பெனா பாடுகிறாய் என்பது உண்மையா? எப்பொழுதும் உன்டை சாப்பாட்டைச் சாப்பிடும்போது, மற்றவர்களுக்கு அருவருக்காதபடி பார்த்துக்கொள்; ஞாயிற்றுக் கிழமைகளில் நீ வரப்பார்க்கும் நடத்தைக் கெட்டவள் போல நடக்காது, பொம்பிளைமாதிரி நட; ஞாயிறுப் பள்ளிக்கூடத்தில் பெனா பாடாதே; ஊதாரிப் பெடியன்களுடன் கதைக்காதே, வழி காட்டுவதற்குகூட; றோட்டில பழங்களைச் சாப்பிடாதே, இளையான்கள் உனக்குப் பின்னால் வரும் ;

*ஆனால், நான் துண்டாய் ஞாயிற்றுக்கிழமைகளில பெனா பாடுறதில்லைஎன்பதோடு, ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடத்தில் பாடுறதில்லையே.*

இப்படித்தான் பொத்தான் தைக்கிறது; இப்படித்தான் நீ இப்ப தைச்சு முடிச்ச பொத்தானுக்கு ஓட்டை தைக்கிறது; இப்படித்தான் உன்ட சட்டைமடிப்புக் கழன்று உன்னை, நீ வரவிரும்புகிற நடத்தைக் கெட்டவள் போல காட்டுறதைத் தடுக்க, அதை மடிச்சு தைக்கிறது; இப்படித்தான் உன்டை அப்பாவின் காக்கி சேட்டுக்களை மடிப்பு வராதபடி இஸ்திரி போடுவது; இப்படித்தான் உனது அப்பாவின் காற்சட்டைகளை மடிப்பு வராதபடி இஸ்திரிப் போடுவது; இப்படித்தான் ஒக்ரா வளர்ப்பது- வீட்டிலிருந்து கனதூரம் தள்ளி- ஏனென்றால் ஒக்ரா மரங்கள் சிவப்பு எறும்புகள் வர இடம் கொடுக்கும்; நீ டஷ்ஷின் வளர்க்கிறபோது கூட தண்ணீ ஊற்று அல்லாட்டிக்கு பிறகு சாப்பிடுற நேரம் தொண்டையை அரிக்கும்; இப்படித்தான் ஒரு மூலையைக் கூட்டுறது; இப்படித்தான் முழு

www.tamilarangam.net

வீட்டையும் கூட்டுறது; இப்படித்தான் ஒரு வளவைக் கூட்டுறது; இப்படித்தான் உனக்கு அதிகம் பிடிக்காத ஒருவரோட சிரிக்கிறது; இப்படித்தான் உனக்கு துண்டாப் பிடிக்காத ஒருவரோட சிரிக்கிறது; இப்படித்தான் உனக்கு துண்டாகப் பிடித்த ஒருவரோட சிரிக்கிறது; இப்படித்தான் தேத்தண்ணீ நேரத்திற்கு மேசையை அடுக்குறது; இப்படித்தான் இராச்சாப்பாட்டிற்கு மேசையை அடுக்கிறது; இப்படித்தான் ஒரு முக்கிய விருந்தாளிக்காக இராச்சாப்பாட்டிற்காக மேசையை அடுக்கிறது; இப்படித்தான் மத்தியானச்சாப்பாட்டுக்கு மேசையை அடுக்கிறது; இப்படித்தான் உனக்கு அதிகம் பழக்கமில்லாத ஆம்பிளைகளுக்கு முன் நடந்து கொள்வது;

இந்தவழிகளில நீ நடந்து கொண்டால் தான் நான் ஏற்கனவே எச்சரித்திருக்கிற நீ வர முயற்சிக்கிற நடத்தைக் கெட்டதனத்தை அவர்கள் இனங்கண்டு கொள்ளமாட்டார்கள்; உன்னை ஒவ்வொரு நாளும் கழுவுறதற்கு மறக்கக்கூடாது, அது உன்ரை எச்சிலாகவிருந்தால் கூட; நிலத்தில் குந்தியிருந்து மாபிள் விளையாடாதே- நீ ஆம்பிளைப்பிள்ளை இல்லை, உனக்குத் தெரியுந்தானே; மற்றவர்களின் பூக்களை பறிக்காதே- அவற்றிலிருந்து உனக்கு எதாவது தொற்றலாம்; கரிக்குருவிகளுக்கு கல் எறியாதே; ஏனென்றால் அது கரிக்குருவியாகயில்லாமல் இருக்கலாம்; இப்படித்தான் பாணில் புடிங் செய்யிறது; இப்படித்தான் டொகுனா செய்யிறது; இப்படித்தான் மிளகு வளர்க்கிறது; இப்படித்தான் தடிமனுக்கெதிரான நல்ல மருந்து செய்யிறது; இப்படித்தான் மீன் பிடிப்பது; இப்படித்தான் உனக்கு பிடிக்காத மீனை, உனக்கு மேல கூடாத எதுவும் படாதபடி திருப்பி எறிவது; இப்படித்தான் ஒரு ஆணை வருத்துறது; இப்படித்தான் ஒரு ஆண் உன்னை வருத்துவது; இப்படித்தான் ஒரு ஆணை நீ காதலிக்கவேண்டும்; இவை பயன் தராமல்விட்டால் இன்னும் சில வழிகள் இருக்குது, அவையும் பயன்தராமல்விட்டால் மனம் தளர்ந்து கைவிடாதே; இப்படித்தான் உனக்கு துப்ப வேண்டும் போலிருந்தால் காற்றில் துப்புறது; இப்படித்தான் அதற்குப்பிறகு அது உனக்குமேல படாதபடி விலகுறது; இப்படித்தான் வருமானத்துக்குள் செலவு செய்யிறது; புதுசா என்று அறியிறதுக்கு எப்பவும் பாணை அமர்த்திப்பார்க்கவேண்டும்;

*ஆனால், கடைக்காரன் என்னை பாணைத் தொட விடாட்டிக்கு என்ன செய்யிறது;*

ஆக, நான் இவ்வளவு சொன்ன பிறகும், கடைக்காரன் பாணை தொட விடாத பெண்ணாகத்தான் நீ வரப்போகிறயா?

(இக்கதை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.)

www.tamilarangam.net



# தென்னாசியாவின் மேல் கழுகுகள்....

**பரராஜசிங்கம்**

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையை ஒரு பரம்பரை ஆட்சியின் முடிவொன்றோ அல்லது ஒரு பயங்கரவாதக்குழு தனது நலனுக்காகச் செய்த கொலையென்றோ வர்ணிப்பதானது இந்தப் படுகொலையின் பின்னணியில் இருக்கும் சர்வதேச முக்கியத்துவத்தை மறைப்பதும் மறுப்பதாகவுமே இருக்கும்.

இன்றைய சர்வதேச சூழ்நிலமைகளில் தெற்காசியாவில் இந்தியாவும் இந்து சமுத்திரமும் வகிக்கும் பங்கினை உணருபவர்களுக்கு, இந்தப் பிரதேசத்தில் ஏகாதிபத்திய அரசுகள் தமது செல்வாக்கை அதிகரிப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளைக் கையாளுவார்கள் என்பதை அறிந்து கொள்ளமுடியும்.

1989 களிலிருந்து ருசியாவிலும், கிழக்கைரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டு வரும் நிலமைகள் உலக முதலாளித்துவத்திற்கு சில தற்காலிக நன்மைகளை உருவாக்கி வருகின்றது என்பதை எவரும் மறக்கமுடியாது. இந்தத் தற்காலிக நன்மைகளின் மூலம் உலகெங்கிலும் தமது ஆளுமையை ஸ்திரமாக்குவதற்கு மேற்குநாடுகள் குறிப்பாக அமெரிக்கா முயன்று கொண்டிருக்கின்றது. அவற்றின் நோக்கம் 1970களிலிருந்து ஸ்தம்பித்துப் பின் ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் தமது பொருளாதார நிலமைகளைச் சீர்செய்வதற்கும், தமது முதலாளித்துவ சுரண்டலைத் தொடர்ந்தும் செய்யக்கூடிய சூழ்நிலமைகளை உருவாக்குவதுமே நோக்கமாக இருக்கின்றது. அமெரிக்க ஜனாதிபதியின் புதிய உலக முறை(New World Order) யின் அடிப்படை இதுவேயாகும். இதற்காக அவர்கள் சகல வழிமுறைகளையும் அரசியல், போர், படுகொலைகள் யாவற்றையும் கையாளுகின்றார்கள்.

கிழக்கைரோப்பிய நாடுகளில் ஸ்டாலினிஸ அதிகாரத்துவங்களின் ஆட்சிகளுக்கெதிராக ஏற்பட்ட மக்களின் ஜனநாயக எழுச்சிகள் தகுந்த புரட்சிகர அரசியல் தலைமைத்துவம் இல்லாது தடுமாறிக் கொண்டபொழுது சந்தைப் பொருளாதாரத்தினால் அவர்களுக்கு விமோசனமளிக்கப் போவதாக மேற்குநாடுகள் புளுகுகின்றன.

கடந்த 500 வருடங்களாக ஆசிய, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளின் இந்த மேற்குலக முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரம் அவர்களைச் சுரண்டி ஒட்டாண்டிகளாக்கிய வரலாற்றை எவரும் மறக்கமுடியாது. இன்று இந்தக் கிழக்கைரோப்பிய நாடுகளையும் புதிய காலணித்துவ நாடுகளாக மாற்றி, அங்கு குழப்பங்களை உருவாக்கி, தாம் மத்தியஸ்தர்களாகவும், ரட்சிப்பவர்களாகவும் சென்று அவர்களைச் சுரண்டுவதே இவர்களுடைய சந்தைப் பொருளாதாரமும், புதிய உலகமுறையுமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருசியாவுக்கு விவசாய உதவி செய்வதாகக் கூறி அமெரிக்காவில் விற்காமல் தேங்கியிருக்கும் தானியங்களை அமெரிக்கக் கப்பல்களில் அனுப்பி உதவ புஷ் முன்வந்துள்ளார். இதுவரை காலமும் ருசியாவிற்கு தானியங்களை விற்றுவந்த கிழக்கைரோப்பிய நாடுகள் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டதுடன், ருசியா நுகர்ச்சிப் பொருள்களுக்கான கடனாளியாகவும் மாறிவிட்டது. இது புதிய உலகமுறையின் ஒரு உதாரணம்.

கிழக்கைரோப்பாவைத் தனது காலனிகளாக்குவதில் ஏறக்குறைய வெற்றி கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கில் ஒரு கொடூரமான போர் மூலம் தனது ஆளுமையை நிலைநாட்டியுள்ளது. கோடிக்கணக்கான உயிர்களைக் குடித்து, சூழலைப் பாதிக்கும் தீகளை மூட்டிச் சர்வதேச சண்டியன்களாக அமெரிக்கா உயர்ந்துள்ளது.

இது புதிய உலகமுறையின் முதற் போரின் வெற்றி என மார்தட்டிக் கொண்டது.

ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும் தனது செல்வாக்கை வலுப்படுத்திக் கொண்ட ஏகாதிபத்தியம் ஆபிரிக்காவில் தனது சகபாடிகளைச் சர்வதேச நிலைக்கு உயர்த்திக் கொண்டிருக்கின்றது. அங்கோலாவின் உள்நாட்டுப் போருக்கு முடிவு காண போர்த்துக்கலிலுள்ள லிஸ்பன் நகரில் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி பேக்கர் மாநாடு நடாத்துகிறான்!

எதியோப்பிய 'புரட்சிப்படைகள்' தலைநகரான அடிஸ்அமாவிற்குள் நுழைவதற்குள் தாம் "ஓ,கே" கொடுத்து விட்டதாக அமெரிக்கா அறிவிக்கின்றது. "ஒரு மனிதன்- ஒரு வாக்கு" என்ற கோட்பாட்டை இன்னும் ஆதரிக்காத தென் ஆபிரிக்கா மீதான வர்த்தகத்தடைகள் அகற்றப்படுகின்றன.

லத்தீன் அமெரிக்காவை தனது கொ(ல்)லைப் புறமாகப் பாவிக்கும் அமெரிக்கா, தென்கிழக்காசியாவில் போதைவஸ்துக் கடத்தல், ஆயுத வியாபாரம், குறைந்த கூலிச்சுரண்டல்மூலமாக தனது ஆளுமையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தால் தாம் நினைத்ததை நேரடியாகச் செய்யமுடியாத ஒரு பிரதேசமாக தெற்காசியாவும் இந்தியாவுமே இன்று மிஞ்சியுள்ளன. ஆப்கானிஸ்தானில் ஆயுதங்களையும் போதைவஸ்துக்களையும் கொட்டி முடிவில்லாத போரை தொடரவிருந்த திட்டங்கள் பிசுபிசுத்தாலும் இன்று அந்த ஆயுதங்கள் பாகிஸ்தான் கடைத்தெருக்களில் கத்தரிக்காய் போல விற்கப்படுகின்றன.

தனிப்பட்ட கோழி சம்பந்தமான ஒரு சண்டையில் சிலர் "ரக்கட்டுகளைப்" பாவித்ததாக பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதி கூறினார். பாகிஸ்தான் தனக்குச் சாதகமான ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டு மேலும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் ஊடுருவும் திட்டங்களை நிறைவேற்றுவதில் அமெரிக்கா கண்ணாக இருக்கின்றது.

தென் இந்து சமுத்திரத்தீவுகளில் பிரெஞ்சு ஏகாதிபத்தியமும், டியோகோகிரேசியாவில் "சட்டலைட்" உளவு பார்க்கும் இராணுவத்தளம் மூலமும் அமெரிக்காவும் தமது ஆரம்பவேலைகளை விஸ்தரிக்க முயலுகின்றன.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தலையிடுவதனால் ருசியாவின் எதிர்ப்பு ஏற்படும் என்ற ஏகாதிபத்திய நாடுகளின் பயம் இன்று குறைவாகவே உள்ளது. மத்திய கிழக்குப் போரில் ருசியாவும், சீனாவும் அமெரிக்காவிற்கு ஜல்ராப் போட்டதுடன் இன்று தமது உள்நாட்டு பிரச்சனைகளில் முடங்கிப் போயுள்ளனர். இந்த இடைவெளியைப் பயன்படுத்தி இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் ஊடுருவ அமெரிக்காத்திட்டம் தீட்டியுள்ளது. கொலை செய்யப்படுவதற்குச் சிலநாட்கள் முன் ராஜீவ் காந்தி புயல் நிவாரணத்திற்காக பங்களாதேஷில் இறங்கியுள்ள அமெரிக்கப்படைகள் வெளியேற வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

வளைகுடாப் போரில் சந்திரசேகர் அரசாங்கம் அமெரிக்க விமானங்களுக்கு எண்ணெய் நிரப்பும் வசதிகளைச் செய்ததுடன் காங்கிரசின் எதிர்ப்பு அந்த அரசாங்கத்திற்கு ஏற்பட ஆரம்பித்தது. வளர்முக நாடுகளின் முதலாளித்துவத் தலைமைகளின் ஏகாதிபத்திய விரோதப்போக்குகளை அமெரிக்கா ஒரு போதும் மன்னிப்பது இல்லை என்பது வரலாறு. கடாபியின் வீட்டின் மீது குண்டுபோட்டு கொலை செய்ய முயற்சித்தது, சதாம்குசேனை " கிட்லராக்கி" அழிக்க முயன்றது சமீபகால வரலாறுகள்.

இந்தியாவில் அரசியல் ஸ்திரமின்மையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கி இந்து சமுத்திரம் பிராந்தியத்தையும் தமது ஆளுமைக்குள் கொண்டுவரும் அமெரிக்க ஏகாதிபத்தியக் குழுக்களின் சரியான அடியாட்களாக புலிகளும் அதிதீவிரம் பேசும் சில போலி மார்க்சியவாதிகளும் இன்றும் இருக்கின்றனர்.

1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பறிமாறப்பட்ட கடிதங்களில் அமெரிக்காவின் ஒலிபரப்பு மற்றும் உளவு பார்க்கும் சாதனங்கள் இலங்கையினின்றும் அகற்றப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சில மாதங்களில் இலங்கையில் சிலாபத்தில் இயங்கும் இந்த ஸ்தாபனம் மேலும் இயங்க ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய உளவுஸ்தாபனத்தின் கைக்கூலிகளான கருணாநிதி, நெடுமாறன், வெங்கடேஸ்வரன் போன்றவர்கள் உதவிகளுடனும் தெற்கு ஆசியாவின் மாபியாவாகிவிட்ட புலிகளுடனும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது செயற்பாடுகளுக்கான திட்டங்களைத் தீட்டுகின்றது.

அந்த செயற்பாட்டின் ஒரு நடவடிக்கையே ராஜீவ்காந்தியின் கொலையாகும்.

இலங்கையை என்றும் குண்டு வெடிக்கும் ஒரு லெபனானாகவும், இந்தியாவை ஸ்திரமில்லாத அரசாங்கத்தையுடைய நாடாகவும், குழப்பங்காளும் நிறைந்த பலவீனமான நாடாகவும் மாற்றுவதன் மூலமே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் புதிய உலக முறையை New World Order) அமெரிக்கா செயற்படுத்த முடியும். ராஜீவின் கொலை இதற்கு ஒரு படி.

---

## இலக்கியச் சந்திப்பு

*12வது இலக்கியச்சந்திப்பு, எதிர்வரும் 10.08.1991, சனிக்கிழமை, காலை 9.00 மணிக்கு,* St Josepheim, Liebfrauen str.1C, 5013 Elsdorf/RHLD

*எனும் இடத்தில் நடைபெறவுள்ளது.*

*மேலதிக தொடர்புகளுக்கு:*

**ILAKKIYACH CHANTHIPPU**
**bei SINNA RAJESWARAN**
**IM WINKEL-2,**
**5013 ELSDORF/RHLD**
**Tel: 02271/66527**

### பங்களாதேஷில் C&A

C&A தென்கொரியாவினதும், பங்களாதேஷினதும் கூட்டுவர்த்தக சினான் கார்மன் லிமிட்டெட்டிலிருந்தே தனது ஆடைகளை வாங்குகின்றது.

இந்நிலையத்தில் பணிபுரிபவர்களில் 98% மானோர் பெண்களே.

இவர்கள் ஒருநாளில் 10 மணித்தியாலங்கள் வேலைசெய்வதற்காக பதிலாக 13 மணித்தியாலங்கள் வேலை செய்கிறார்கள்.

இவர்களுக்கு சீரற்ற இடைவெளிகளிலேயே சம்பளம் வழங்கப்படுகின்றது. 1985 ஆம் ஆண்டு ஒரு மாதத்திற்கு 3 சதங்களையே சம்பளமாக பெற்றார்கள்.

நெதர்லாந்திலுள்ள தேவாலயத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், Irene Van der Woude, அந்நாட்டு பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தபோது இச்சம்பளக்குறைவு பற்றிய கீழ்கண்ட விபரங்களைத் தெரிவித்தார்.

" பங்களா தேஷிலுள்ள C&A போன்ற பெரும் கொம்பனிகளில் மிகவும் குறைந்த சம்பளங்களுக்காக பெண்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்கள் சொந்த ஆடைகளைக் கூட அனுப்புகிறார்கள். இதன் விளைவுகள் என்னவென்றால், அழகிய மலிவான ஆடைகளை அணிந்து நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் அதேவேளை பங்களாதேஷிலுள்ள பெண்கள் ஏழ்மைக்குட்படுத்தப்படுகிறார்கள்"

c&A யைச் சேர்ந்தவர்கள் கலவரத்துடன் கூறியதாவது: "பங்களாதேஷிலும் ஏனைய நாடுகளிலும் அரசாங்கமும் தொழிலாளர்களும் ஒரு மேற்கத்தைய ஏற்றுமதியாளருக்காக சேவையாற்றுவதில் சந்தோஷமடைகிறார்கள். அவர்கள் தங்கள் பொருளாதார அபிவிருத்தியிற்கான ஊக்குவிப்புக்களை வரவேற்கிறார்கள். அவர்களது சம்பளம் மேற்கத்தைய நுகர்வரின் கண்களுக்கு குறைவாகத் தெரியலாம், ஆனால் பொருளாதார அபிவிருத்தியில் அதன் பெறுமதி அதிகம்."

நன்றி:- Drops of Sweat



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீடும் வீதியும்: உமாவின் விமர்சனத்திற்கு ஒரு பதில்.

சுகன்

'தேனீ'யில் இடம்பெற்ற 'வீடும் வீதியும்' நாடக விமர்சனம் தொடர்பான எனது 'அபிப்பிராயங்களை' உங்களுடனும் வாசகர்களுடனும் பகிர்ந்து கொள்வது ஆரோக்கியமானது.

நாடகம் கடந்த காலத்தினது இரண்டு பிரச்சனைகளை தளமாகக் கொண்டது என உணர்கிறேன்.

1. யாழ்ப்பாண சமூகத்தில் பெண்களின் பொதுவான நிலைமை.

2. இன்றெலெக்சுவலினால் கவனமாகத் தவிர்க்கப்பட்டு வருவதும் அவர்களால் சுரண்டப்படுவதுமான சமூக யதார்த்தம்.

பெண்கள் தினத்தன்று யாராலோ எழுதிக்கொடுக்கப்பட்டு பிரபாகரனால் வாசிக்கப்பட்ட வாழ்த்துப்பாவை விடுதலைப்புலிகள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். அந்த எழுதிக் கொடுத்தவர் சொல்கிறார்,

"தமிழீழ பெண் சமூகம் எழுச்சி
கொண்டுவிட்டது.
பெண்கள் ஆயுதமேந்தி களத்தில்
நிற்கிறார்கள்.
வீறுகொண்டு எழுந்துவிட்டார்கள்!"

-இது எங்கள் சமூகத்தைத் தெரிந்து கொண்டும் வஞ்சகத்தனமாகச் சொல்லப்படும் தந்திரோபாய வாக்குமூலம்.

ஆனால் ஒரு முற்போக்கு இயக்கத்தின் சமூகப்பார்வை இதற்கு எதிராக மட்டுமே இருக்கமுடியும்.

அது- சாக்கடையை சாக்கடைதான் என ஏற்றுக் கொள்வதும் அதைப் பகிரப்படுத்துவதும் தான்.

கூச்சலிடுவதும் கோஷமெழுப்புவதுமல்ல.

எனது இரண்டு தோழர்களின்( ந... அ...) தமக்கையர் இருவர் சமீபத்தில் தற்கொலை செய்துகொண்டார்கள்.

காரணம் ந..வும் அ..வும் இருவருக்கும் சீதனம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். திருமணம் நின்று போனது. விளைவு தூக்குக் கயிறு தன் முடிச்சை இறுக்கிக்கொண்டது. அ..வினது தமக்கையார் சாகும் போது தனது மரணத்திற்கு தம்பிதான் காரணம் என கடிதம் வேறு எழுதி வைத்துள்ளார்.

ம.. என்ற எனது நண்பனின் சின்னம்மாவிற்கு (தாயாருடைய தங்கை) வயது 37. சமீபத்தில் கடிதம் வந்திருக்கிறது. தனது கடைசித் தம்பியாரும் இப்போது காதலித்துக் கலியாணம் செய்யப்போகிறான்(வயது 21) அவனுடைய கலியாணத்தையும் பார்த்துவிட்டு "அலரிக்கொட்டை" அரைக்கப்போவதாக.

ஆனால் கடந்தகால முற்போக்கு பரிச்சயமுள்ள இலங்கை, ஐரோப்பிய தமிழ் ஆண்களுடைய பிரச்சனை இதுவல்ல. அவர்களுக்கு நல்ல எதிர்காலமுண்டு!

கடந்த 9 வருடங்களாக நான் அறிந்த முற்போக்கு இளைஞர்கள் அனைவருமே 5 லட்சத்திற்கு மேல் சீதணம் வாங்கியோர் தான். கொடிகட்டி அருந்ததி பார்த்தவர்கள் தான். பெயர், முகவரி தேவையெனில் தருவதற்கு விரும்புகிறேன்.

வட்டுக்கோட்டையில் எனது ஊரில்) இப்போது 11 வயதிற்கு மேற்பட்ட எந்த ஆணுமில்லை.

காசு இருந்தாலும், இல்லாவிட்டாலும் கலியாணத்திற்கு நாம்பனுகள் இல்லை. என்ன விலை கொடுத்தாலும் பிடிச்சுக் கொண்டுபோய்க் கட்டுவதற்கு.

சமீபத்தில் எனது மருமகளுக்கு ஒரு நண்பனை திருமணம் கேட்கப்போனேன். அவன் தனக்கு கலியாணம் முற்றான கதையைச் சொன்னான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொன்னான்.

எவ்வளவு சீதனம் எனக் கேட்டேன்.

"கனக்க வீட்டுக்காரருக்கு கேட்க விருப்பமில்லை, 5 லட்சமும் நகையும் தான்"

போன கிழமை ரயில் நிலையத்தில் 14/15 வயது மதிக்கத்தக்க இளம் பிரெஞ்சுச் சிட்டுக்கள் கட்டி அணைத்து முத்தமிடும் அழகை ரசித்தேன். அந்தப் பெண் எனது மருமகளாக இருக்கூடாதா என ஏங்கினேன்.

எனது ஊரில் விதவா விவாகமும் கலப்புத் திருமணமும் இப்போது பெரிய பிரச்சனை இல்லை. இந்த நெருப்பு, பிரேதங்களின் சாம்பல் கொண்டு மறைக்கப்பட்டுள்ளது.

இப்போது விவாகமே பெரிய பிரச்சனையாக உள்ளது.

பாலியல் தேவை கனவாக உள்ளது.

எனக்கு திருமணம் (நிலப்பிரபுத்துவ அர்த்தத்தில்) ஒரு நல்ல கனவாக இல்லை. விபச்சார விடுதிகளை நாடுவது சாதாரணமானது. ஆனால் பாலியல் தேவை பூர்த்தியாகாத எனது சமூகப் பெண்களுக்கு கடவுள் தந்த வரம் கிஸ்ரீரியா(ஏக்கநோய்) மட்டும்தான்.

1:8 என்ற விகிதத்தில் அதிகரித்திருக்கும் திருமணப் பிரச்சனையில் புத்திஜீவிகள் நிலைப்பாடு என்ன என்று கேட்டால் 'புரட்சி' என பதில் வருகிறது. இவ்விடத்தில் 37 வயதான பெண்கள் நிலை என்ன என்று கேட்டால் அதற்கும் "புரட்சி" தான். இவ்விடத்தில் அவசியமானது திருமணமே தவிர புரட்சியல்ல.


வசதியானவர்களுக்கு 'திருமணமும்' 'புரட்சியும்' பிரச்சனைக்குரியவனவல்ல. வசதி அற்றோருக்கு இரண்டுமே பெரிய பிரச்சனை தான்.

இது புத்திஜீவிகளுக்கான பிரச்சனையல்ல. இது எமது சமூகப் பிரச்சனை. கடந்தகால 'முற்போக்கு இயக்கத்தின்' வரலாறு என்னவெனில் சமூகமாற்றத்திற்காக புறப்பட்ட பெண்களை பாலியல் தேவைக்காக பயன்படுத்தி வெட்டித்தாட்டது தான். (உ+ம். மணியம் தோட்டம், வட்டுக்கோட்டை).

'வீடும் வீதியும்' நாடகத்தை சமூக யதார்த்தத்துடன் ஒப்புநோக்கிப்பார்க்காமல் அல்லது அந்தக் கொடுமைகளால் பாதிக்கப்படாமல் அதை ஏற்றுக்கொள்வது சிரமமானது. முன்னுரையையும் நாடகத்தையும் திருப்பவும் வாசித்துப்பாருங்கள்.

எங்கெல்ஸின் கூற்றை உங்களுக்கு நினைவிற் கொண்டுவர விரும்புகிறேன்.

"இலக்கிய கர்த்தா சமூகப்பிரச்சனைகளுக்கான நிரந்தரத்தீர்வுகளை தட்டில் ஏந்தித்தரக் கடமைப்பட்டவனல்ல.."




பெண்கள் சந்திப்பின் 'மலர்' வெளிவந்துள்ளது.
விலை 5.00 DM

இம்மலரைப் பெற விரும்புவோர் 5.00 DM பெறுமதியான தபால் முத்திரைகளை அனுப்பியு[ம்] பெற்றுக் கொள்ளலாம்.

சகல தொடர்புகளுக்கும்:

FRAUEN TREFFEN
C/O: IZDW
OVERWEG STR.31
4690 HERNE 1



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வளைகுடா: யுத்தம் முடிந்த பின்பும்

வளைகுடாவில் பெரும்வாரியான மக்கள் அழிவுக்கும், பொருட் சேதங்களுக்கும் காரணமாகவிருந்த போர் முடிந்துவிட்டது. ஆனால், அதனால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் இன்னும் ஆறவில்லை. அதன் கோரவிளைவுகள் தற்போது எதிரொலிக்கத் தொடங்கியிருக்கின்றன. இப்போர் எழுப்பியுள்ள கேள்விகளும், கோரிக்கைகளும் அமெரிக்காவினாலும், ஐரோப்பிய நாடுகளினாலும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. இப்போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளும் பொருளாதார ரீதியான பல சிக்கல்களுக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு, இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகப்பட்டுள்ளனர். ஈராக்கினாலும், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளினாலும் தொடுக்கப்பட்ட இந்த யுத்தத்தின் போது எரியூட்டப்பட்ட எண்ணெய்க்கிணறுகள் இன்னும் எரிந்த வண்ணமேயிருக்கின்றன. இவற்றினால் வளியில் பரவும் புகையினாலும், கடலில் மிதக்கும் எண்ணெயினாலும் சூழல் , பயமுறுத்தும் வகையில் மாசடைந்திருக்கின்றது. இப்பயங்கரங்களுக்கு கூடுதலாக மத்தியகிழக்குநாடுகளும், ஆசியநாடுகளும், சில ஆபிரிக்கநாடுகளுமே முகங்கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

தற்போது 800க்கும் மேற்பட்ட எண்ணெய் கிணறுகள் குவைத்திலும், அதற்கும் மேற்பட்ட கிணறுகள் ஈராக்கிலும் எரிந்து கொண்டிருக்கின்றன. இதன் விளைவுகளாக கறுப்புமழை, எண்ணெய்க்கழிவுகள் நீரில் மிதத்தல், தடித்த கறுப்பு முகிற்கூட்டம் ஆகியன 2,000 கிலோ மீற்றர் தூரத்திற்கு கிழக்கு மத்தியதரை கடலிலிருந்து இந்து சமுத்திரத்தை நோக்கி பரவத் தொடங்கியிருக்கின்றன, அவற்றின் பாதிப்புக்களின் ஆரம்பக்கட்டத்தில் தான் நாம் இன்னும் இருந்தாலும், ஏற்கனவே ஈரானின் சில பகுதிகளைக் கரும்முகில்கள் சூழ்ந்து இரவுபோல் காட்சியளிக்கச் செய்துள்ளன. உதாரணமாக போர் நடைபெற்றகாலங்களில் சி. என். என்னினால் ஒளிபரப்பரப்பப்பட்ட செய்திகளில் இரவுபோல் காட்சியளித்த பகற்காட்சிகளை ஒத்ததாக இவை இருக்கும். இம்மாற்றங்கள் சூரியகிரகணங்களையும், வெப்பநிலைக் குறைப்புகளையுல் பிரதிநிதித்துவப்படுத்துமென நம்பப்படுகின்றது.

இவ்வெண்ணெய்க்கிணறுகள் எரிந்து கொண்டிருக்கும் வரை 3-10 மில்லியன் பீப்பாய் எண்ணெய் ஒரு நாளுக்கு எரியும் வாய்ப்பிருக்கின்றதோடு, 3 மில்லியன் டொன் கறும்புகை மேற்குற்றாடலில் பரவுவதற்கான சந்தர்ப்பமும் இருக்கின்றது.

அணுவாயுதக் குறைப்பு பிரச்சாரப்பிரிவினரின் மதிப்பீட்டின்படி 500,000 டொன் புகை மாதத்திற்கு உற்பத்தியாகுமென நம்பப்படுகின்றது. இவை மழையின்மையையும், அத்துடன் கடலில் பரவியிருக்கும் எண்ணெய் அதிகளவான பாதிப்பையும் ஏற்படுத்த வாய்ப்பிருக்கின்றது.

10 மில்லியன் பீப்பாய் எண்ணெய் 1,000 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பளவிற்கு நாளும் கழிகின்றது. 3 கி.மீற்றர்க்கு உயரக்கூடிய புகை அண்டைய பிரதேசங்களில் 500கி.மிற்றர் பரப்பிற்கு விரிவடைந்து தங்கிக்காணப்படும். இப்பகுதிகளில் காற்றின் மட்டம் குறைவாகக் காணப்படுவதால், 3-12 கிலோ மீற்றர் உயரமுடைய புகை வெகுவிரைவில் கிழக்குப்பகுதிகளுக்கு கடத்திச் செல்லப்படுமெனவும், ஜனவரி- மார்ச் காலப்பகுதிகளில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியே வீசப்படுவதால் வட இந்தியாவை கடந்துசெல்லும் எனக் கூறப்படுகின்றது. எண்ணெய்க் கிணறுகள் எரிவதனால் அதிகளவாக வெளியேற்றப்படும் தூசு சுற்றாடலில் பரவியிருப்பதால் சூரியஒளியின் அளவு குறைவதற்கன வாய்ப்பிருப்பதாக நம்பப்படுகின்றது. அதனால் வடஇந்தியாவின் வெப்பநிலை குறையச் சந்தர்ப்பம் இருக்கின்றதோடு, மேற்கு பகுதிகளின் சூரியஒளி இழப்பு 11% மாக, அதாவது முகில்நிறைந்த நாட்களின் வெப்பநிலைக்கு ஒத்தாகவேயிருக்குமாம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதைத்தொடர்ந்து வரவிருக்கும் கறுப்புமழை, அது பெய்யும் பிரதேசம் அனைத்தையும் அழிக்கும் தன்மையுடையதெனவும், இத்தகைய கடும் மழை பெய்யுமானால் நகரப்புறங்களிலுள்ள ஏராளமான விவசாயநிலங்களையும், புற்தரைகளையும், குடிநீர் வலயங்களையும் அழிக்குமெனவும், மீண்டும் மறுசீரமைக்கமுடியாதவாறு ஆறுகளும், நதிகளும் மாசுப்படுத்தப்படுமெனவும் துருக்கிய விஞ்ஞான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவற்றினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் உடல்நலப்பாதிப்புக்கள் ஏற்படவாய்ப்பிருக்கின்றது. குறிப்பாக உயிருக்காபத்தான நுரையீரல் புற்றுநோய் ஏற்படக்கூடிய அச்சத்தை உண்டாக்கியுள்ளது.

3 மில்லியன் பீப்பாய் எண்ணெய் சாதாரண எண்ணெய் உற்பத்தியிலும் பார்க்க இருமடங்கு எண்ணெய் ஒருநாளில் புகையாக குவைத் எண்ணெய்கிணறுகளிலிருந்து வெளியேற்றப்படுகின்றது. நூற்றுக்கணக்கான மில்லியன் மக்கள் நம்பியிருக்கும் விவசாயத்திற்கு உகந்த சாதாரண காலநிலையை ஏற்படுத்தகூடிய பருவக்காற்றும் பாதிப்படைய வாய்ப்பிருக்கின்றது.ஏனைய பூமிப்பரப்புகளில் இதன் பாதிப்புக்கள் தாமதமாகவே ஏற்படலாம் எனவும் நம்பப்படுகின்றது. ஆசிய நாடுகளில் மழையின்மையால் வறட்சியும், பெருமளவில் வெளியேறும் புழுதியால் புழுதிப்புயலும் உருவாகலாம் என சூழல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இத்துணை விழுப்புண்களையும் விட்டுச்சென்ற போருக்குத் தூண்டுதலாகவிருந்த அமெரிக்காவும், ஈராக்கிற்கு பெருந்தொகையான ஆயுதங்களை விற்பனை செய்த ஜேர்மன் போன்ற நாடுகளும் இத்தீயை அணைப்பதில் அதிக சிரத்தை காட்டுவதாகவில்லை. தற்போது வரை 50 கிணறுகளே அணைக்கப்பட்டிருக்கின்றன. போதியளவு தீயணைக்கும் கருவிகள் இல்லாமையினால் ஒன்றரை வருடங்கள் எடுக்கலாம் என கூறப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவுக்கு ஈராக்கின் ஏவுகணைகளைத் தடுப்பதற்கான 3 பெற்றியோற்றுக்கள் தான் ஆரம்பத்தில் இருந்த போதும், 6 மாதங்களுக்கிடையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றியோற்றுக்கள் இருந்ததாம்.




உயிர்களை அழிக்க மட்டுமே கூடிய ஆயுதங்களையும், நவீனரக கருவிகளையும் பெறுவதற்கு காட்டப்பட்ட அக்கறை, பாதிப்புக்களை சீரமைத்து மீளக்கட்டியெழுப்புவதற்காக உழைப்பதற்கு எந்தத் தரப்பும் முயற்சியெடுக்கின்றார்கள் இல்லை.

தமது வாழ்நாட்களை வறுமையினாலும், அந்நாடுகளில் முடக்கிவிடப்பட்டுள்ள அரசியல் யுத்த நிலமைகளினாலும், இயற்கை அழிவுகளினாலும் சொல்லெணாத் துயரங்களுடன் கழித்துக் கொண்டிருக்கும் ஆசியா, ஆபிரிக்க, ஆராபிய நாட்டு மக்களுக்கு மேலே இநதப் பேரிடியும் வீழ்ந்துள்ளது. இதேசமயம் இப்போரில் முக்கிய பங்குவகித்த அமெரிக்க படைத் தளபதி ஸ்வார்ஸ் கோப் பற்றிப விவரணப்படக் கசற் வெளியீடும், அவரை கௌரவிக்கும் முகமான 'வெற்றி' விழாக்களும் அமெரிக்காவில் நடாத்தப்படுகின்றன. தங்கள் சுய இலாபங்களை மாத்திரம் கருத்திற்கொண்டு அவிழ்த்துவிடப்படும் இத்தகையயுத்தங்கள் இனிமேலாவது நிறுத்தப்படவேண்டும். மக்களுடன் கூடிய வெற்றிகளில் தான் அர்த்தமிருக்குமேயன்றி, வெற்றிடங்களும், வெறும் நிலப்பரப்புகளினாலும் எத்தகைய பயனும் இல்லை.

வேணு

www.tamilarangam.net

# பெண்கள் மீது வன்முறைக் கரங்கள்!

உலகெங்கிலும் வாழும் பெண்கள் சமூக ரீதியான ஒடுக்குமுறைகளுடன் கூடிய அரசியல் ரீதியான வன்முறைகளுக்கும், மனிதஉரிமை மீறல்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். சட்டபூர்வமற்ற கைதுகளும், சித்திரவதைகளும் பெண்கள் மேல் பரவலாக கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. சில நாடுகளின் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தினதும், மேலதிகாரிகளினதும் கட்டளையின் பேரில் பெண்கள் காணாமல் போவதோடு, கொலையும் செய்யப்படுகிறார்கள். பல அரசாங்கங்களின் அதிகாரபூர்வமான உத்தரவுகளினால் அவர்கள் எழுதவோ, வெளியிடவோ, கல்விகற்பிக்கவோ, பிரயாணம் செய்யவோ, சமூகத்திலுள்ள மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவோ தடைசெய்யப்பட்டு அச்சமூகங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். பெருந்தொகையான பெண்கள் அந்நாடுகளில் நிலவும் இனரீதியான ஒடுக்கல்களுக்கும், இராணுவ அழிவுகளுக்கும் பலியாகின்றனர்.

தத்தமது நாடுகளில் அரசியல் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ள பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் அதேசமயம் பொதுவான மனித உரிமைகளுக்காகவும் போராடுகிறார்கள். அவர்களின் நடவடிக்கைகளில் எல்லா மட்டங்களிலும் உள்ள பெண்களை இணைத்து, தேவாலயங்கள், தொழிற்சங்கங்கள், கட்சிகள், மனிதஉரிமைக்கான அமைப்புகள் ஆகியவற்றிற்கூடாக செயற்படுகிறார்கள். இவ்வமைப்புகளில் அதிகமானவை அந்நாட்டு அரசாங்கங்களினால் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கெதிரான நியாயபூர்வமற்ற பயங்கரவாதமும், சமூக ரீதியான ஒடுக்குமுறைகளும் அதிகரித்துள்ளன.

பெரும்பாலான நாடுகளில் மனித உரிமை இயக்க அங்கத்தவர்கள், தொழிற்சங்கவாதிகள், பத்திரிகையாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல்கட்சி அங்கத்தவர்கள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு அல்லது காணாமல் போயிருக்கிறார்கள்.

சொந்தக் குடும்பங்களுக்கு நிகழ்ந்த அசாதாரண நிலமைகளினால் பாதிப்புற்ற பல பெண்கள், அந்நாடுகளில் வாழும் மக்களைப் பாதுகாக்கவென உணர்வுபூர்வமாக இவ்வமைப்புகளில் தம்மை இணைத்துக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவர் மீதான அனுதாபமும், உதவியும் இவர்களுக்கு மேன்மேலும் பலம் சேர்க்கின்றது. அவர்களுக்கிடையில் வெறும் பரஸ்பர உதவியாக மட்டுமல்லாது அவர்களது நடவடிக்கைகள் மேலும் விரிவடைவதற்கு இது வாய்ப்பளிக்கின்றது. அரசியல்ரீதியான அழிவுகளையும், மனித உரிமை மீறல்களையும் எதிர்ப்பதில் பங்கேற்கிறார்கள். நித்தமும் அனைவராலும் "விசர்ப் பொம்பிளைகள்" எனப் ஏளனம் செய்யப்படுபவர்கள், உண்மையில் அரசுக்கெதிரான கடுமையான எதிர்ப்பியக்கமாக வளர்ந்து வருகிறார்கள். இப்பெண்கள் பயங்கரங்களை நேரடியாக உணர்வதோடு, இத்துன்புறுத்தல்களைப் போக்குவதற்கான நோக்கும் உடையவர்களாகவேயிருக்கிறார்கள்.

விசாரணைகளின் போதும், கைது செய்யப்பட்டபின்பும் பெண்கள் இரட்டிப்பான ஒடுக்குமுறைகளைச் சந்திக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை, அவர்களின் அரசுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு மட்டுமல்லாது, வழமையான பெண் என்ற ஸ்தானத்திலிருந்து விலகி மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தடைசெய்வதோடு, மீண்டும் சமூக சுவர்களுக்குள் அவர்களை திருப்பித் தள்ளுவதாகவே அமைகின்றது.

பெண் மீதான வன்முறைகள் பெரும்பாலும் அவர்களது சொந்த அரசியல் நடவடிக்கைகளுக்காக அல்லது அவர்கள் அங்கம் வகிக்கும் ஓர் குறிப்பிட்ட குழுவிற்காகவும் அமைகின்றது.

அதிகமான பெண்கள் அவர்களது கணவன்மார்களினது நடவடிக்கைகளுக்காக துன்பத்தை அனுபவிக்க வேண்டியவர்களாவுள்ளதோடு, பல சமயங்களில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காகவோ அல்லது கையெழுத்தை பெறுவதற்காகவோ பலாத்காரப்படுத்தப்படுகிறார்கள்.

பெண்கள் மேல் பிரயோகிக்கப்படும் இத்தகைய பாலியல் பலாத்காரங்களினால் அவர்கள் சமூகத்தினால்

www.tamilarangam.net



தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லப்படும் எகிப்திய பெண்ணொருவர்.

அவமானத்துக் குட்படுத்தப்படுவதோடு, கணவனாலும், குடும்பத்தினராலும் ஒதுக்கப்படுகிறார்கள்.

சில நாடுகளில் கலாசாரரீதியாகவும், சம்பிரதாயங்களினாலும், சமூக ரீதியாகவும் கீழ்மைப்படுத்தப்படுதலை எதிர்த்தமைக்காக பெண்கள் அல்லற்படுத்தப்படுகிறார்கள்.

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண்களின் சாட்சியங்கள், சிறைகளில் அடைபட்டிருக்கும் ஆண் கைதிகளுக்கொத்த சித்திரவதைகளையே பெண்களும் அனுபவிக்கிறார்கள் என தெரியப்படுத்துகின்றன. அதிகமான பெண்கைதிகள் பாலியல் ரீதியான ஒடுக்குமுறைகளுக்கும், பலாத்காரங்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள். தாம் அனுபவித்த சித்திரவதைகளை வெளியிடுவதால் அவமானப்பட நேரிடும் என்பதற்காக தமக்குள்ளேயே தமது சோகங்களை மூடிவைக்கின்றனர்.

இவ்வித பெண்களுக்கெதிராக இராணுவத்தினரால் பிரயோகிக்கப்படும் வன்முறைகள், தண்டனைகள், அவர்களின் அரசியற் செயற்பாடுகளுக்கன்றி கூடுதலாக பெண் என்ற ஒரே காரணத்துக்காகத்தானிருக்கின்றது. இதனால் அவர்களது தண்டனை இரு மடங்காக உயர்கின்றது.

இச்சித்திரவதைகளின் விளைவுகளாக, குறிப்பாக பாலியல் சித்திரவதைகளுக்குப்பின், உடல் ரீதியாகவும், மனோரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பெண்கள் பாதிப்படைகிறார்கள். இவ்வுடல் ரீதியான பாதிப்புக்கள் மறுசீரமைக்க முடியாத பெண்கள் சம்பந்தமான நோய்களுக்கு வித்திடுகின்றது. கர்ப்பினிப் பெண்கள் மீதான சித்திரவதைகளினால் கருவில் உருவாகிக் கொண்டிருக்கும் குழந்தையும் அச்சித்திரவதைகளை சேர்ந்து அனுபவிக்கின்றது. பெரும்பாலும் அக்குழந்தைகள் அங்கவீனமாகவோ அல்லது உயிரற்ற நிலையிலேயே பிறக்கின்றன.

தாய்மாரின் முன்னிலையில் பிள்ளைகள் சித்திரவதைப்படுத்தப்படல் அல்லது பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியாத நிலையில் விடப்படுதல் போன்றவை பல பெண்களை அதிர்ச்சியுற்ற நிலையிலேயே வாழவைக்கின்றது.

சிறைகளில் தமது வாழ்நாட்களைக் கழிக்கும் பெண்கள், அவர்களுக்கு வழங்கப்படும் சித்திரவதைகளோடு, போதிய இடவசதியின்மை, போசாக்கான உணவின்மை போன்ற இன்னல்களைச் சந்திக்கவேண்டியுள்ளது.

சனநெருக்கடியான அறைகள், சித்திரவதைகளுக்குப்பின் பிரத்தியோக மருத்துவ வசதியின்மை, மலசலகூடவசதியின்மை, சுகாதாரமற்ற சூழல் போன்றவற்றால் அவர்களின் வாழ்முறை சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதோடு, உணர்வுரீதியாகவும் பாதிப்படைந்த நிலையிலேயே யிருக்கிறார்கள்.

தொடரும் இழிவுபடுத்தல்களினாலும், உடல்ரீதியான பாதிப்புக்களினாலும் பிரசவவேளைகளில் பெண்கள் துன்பப்பட நேரிடுகிறது. சிறைச்சாலைகளின் கட்டில்களில், சித்திரவதைகளுக்கும், பலாத்காரங்களுக்கும் மத்தியிலேயே பல பெண்கள் குழந்தைகளைப் பிரசவிக்கிறார்கள்.

கடுமையான விசாரணைகளும், பாராமரிப்பு பற்றாக்குறைகளும். காவலும் ஆண் காவலாளிகளாலேயே மேற்கொள்ளப்படுவதால், குறிப்பாக முஸ்லிம் பெண்கள் அவர்களின் சமய நம்பிக்கைகளுக்கமைய இழிவுபடுத்தலாகவே உணர்கிறார்கள்.

குழந்தைகளுடன் கைதாகிய பெண்களை, சிறை அதிகாரிகளினால் வழங்கப்படும் சத்தற்ற உணவு, அசுத்தமான வசிப்பிடம், பராமரிப்பின்மை போன்றவை அவர்களை உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் தாக்குகின்றது.

www.tamilarangam.net



*திருகோணமலையில்*

*அமைந்துள்ள ஓர்*

*அகதிமுகாம்.*

மரணதண்டனையானது அடிப்படையான மனிதஉரிமைகள், அதாவது உயிர்வாழ்வதற்கான உரிமை, உடல்ரீதியான பாதிப்புக்குள்ளாகாமல் இருத்தல், சித்திரவதைகளிலிருந்தும், ஏனைய கொடூர செயல்களிலிருந்தும் பாதுகாப்பு, மனிதநேயமற்ற செயற்பாடுகள், கீழ்த்தரமான நடவடிக்கைகள் தண்டனை மேற்கொள்ளாமை போன்றவற்றிற்கு எதிரானதாகும்.

பெண்களுக்கும் மரணதண்டனை என்பது அதிகம் பகிரங்கப்படுத்தப்படாத உண்மையாகவிருக்கின்றது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் தகவல்களின்படி, தென்ஆபிரிக்கா, ஈரான், பாகிஸ்தான், எகிப்து, குவைத், சம்பியா, மலேசியா, இந்தோனேசியா, இந்தியா, ஜப்பான், தாய்வான், சவூதிஅரேபியா, அல்ஜீரியா, சோமாலியா, சீனா, சோவியத்யூனியன் ஆகிய நாடுகளில் பெண்களுக்கு மரணதண்டனை என்பது அமுலில் உள்ளது.

சில தகவல்களின்படி, இஸ்லாம் மதத்தில் கன்னி கழியாத பெண்களை கொலை செய்வது தடைசெய்யப்பட்டிருப்பதால் ஈரானில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பெண்கள் கொலை செய்யப்படுவதற்கு முன்பாக, இராணுவத்தினருக்கு பலவந்தமாக திருமணம் செய்து வைக்கப்பட்டு, பலாத்காரமும் செய்யப்படுகிறார்கள்.

விசேடமாக இஸ்லாமிய நாடுகளில் கொடூரமான கொலைத்தண்டனை வழங்கப்படுவது, கணவன் தவிர்ந்த இன்னொரு ஆணுடன் தொடர்பு வைத்தமைக்காக அல்லது கணவனை கொலை செய்தமைக்காகவே அமைகின்றது. இத்தண்டனை குற்றத்திலும் பார்க்க, ஒரு மனைவி செய்யவேண்டிய 'விசுவாசமான கடமைகளைச்' செய்யத் தவறியமைக்காகவேயிருக்கின்றது.

சொந்த நாடுகளில் நிலவும் யுத்த சூழ்நிலமைகளினால் பல பெண்கள் அந்நாடுகளை விட்டு வெளியேறி அன்னிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்கள். அந்நாடுகளிலும் பல்வித வன்முறைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் இலக்காகிறார்கள்.


காலங்காலமாக அவர்கள் மேல் செலுத்தப்பட்டிருக்கும் சமூக ரீதியான அடக்குமுறைகளுடன் இத்தகைய மனிதநேயமற்ற செயல்களினாலும் பெண்கள் மேன்மேலும் ஒடுக்கப்படுகிறார்கள். இத்தகைய பெண்கள் மீதான வன்முறைகளையும் எதிர்த்து, பொதுவான மனித உரிமைகளுக்காக குரல் எழுப்பும் எதிர்ப்பியக்கங்கள் இன்று அதிக தூரம் செல்லமுடியாமல் முடக்கப்பட்டு இருப்பினும் தொடர்ச்சியான செயற்பாடுகளினாலும், அனைவரினதும் ஒத்துழைப்பினாலும் இவ்வநீதிகள் நிச்சயம் தோற்கடிக்கப்படும்.

( சர்வதேச மன்னிப்புச் சபையின் வெளியீடு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கண்ணின் விலை ௨00 ரூபா.

உலகத்தின் அதிக விலை குறைந்த பொருளென்ன? என்ற கேள்வியெழுந்தால், பெண் என்றே விடை வரலாம். ஒரு குண்டூசிக்குக் கொடுக்கும் மதிப்பைக் கூட இச்சமூக அமைப்பில் பெண்களுக்களிக்க பலரும் தவறுகின்றனர். எதையும் சகிக்ககூடிய ஒரு உணர்வற்ற ஜடமாகவேயே பெண் நாடத்தப்படுகின்றாள்.

அவளின் உழைப்புச் சக்திக்கான மதிப்போ, அவள் உடல் நலத்தில் அக்கறையோ எங்கும் பொருட்படுத்தப்படுவதில்லை.

தொழிற்சாலைகளில் குறைந்த கூலிக்காக எந்தச் சலுகைகளும் இன்றி முதலாளிகளின் நலம் பேணும் நோக்கத்திற்காக மட்டுமே பல பெண்கள் நாளும் இயந்திரமாய் உழைக்கின்றார்கள். தொழில்புரியும் சமயங்களில் ஏதாயினும் விபத்துக்கள் நேர்ந்தாலும் அதற்கான நிவாரணம் தகுந்தளவில் கொடுக்கப்படுவதில்லை. இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒரு நல்ல உதாரணமாக இலங்கையிலுள்ள சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் வேலைபுரியும் ஒரு பெண்தொழிலாளிக்கு நிகழ்ந்த சம்பவம் எமக்கு உணர்த்துகிறது.

"வழமைபோலவே நான் 1990 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி வேலைக்குப் போனேன். நான் அன்று சேட்டுக்களைத் தைக்கும்படி பணிக்கப்பட்டேன். நான் அவற்றைத் தைத்துக் கொண்டிருக்கும் போது, என் பின்புறமாக வந்த மேற்பார்வையாளர், "இப்படியா உன்னைத் தைக்கச் சொன்னது?" எனக் கத்தியபடி என் தலையில் அடித்தார். இதை முற்றிலும் நான் எதிர்ப்பார்த்திராததினால் எனது தலை தையல் மெசினில் அடிபட்டு, அதிலிருந்த ஓர் இரும்புத்துண்டு எனது இடது கண்ணைக் காயப்படுத்தியது... தாங்கமுடியாத வலியுடன் சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள வைத்தியநிலையத்திற்கு தனியே சென்றேன். எனது கொம்பனியினர் என்னை ஒய்வெடுத்து வீட்டிற்குச் செல்லும்படி கூறினார்கள். நான் தனியே வைத்தியநிலையத்திற்கு வந்தமைக்காக வைத்திய அதிகாரியால் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டேன். நான் என்ன செய்வது?

எனக்கு வைத்தியம் செய்வதற்கான கருவிகளோ, மருந்தோ தன்னிடம் இல்லாமையினால், என்னைப் பொது வைத்தியசாலையில் தங்கியிருந்து வைத்தியம் பெறும்படி அவ்வதிகாரி கூறினார்.

அதற்குப்பின் நான் வைத்தியநிலையத்திலிருந்து சுதந்திர வர்த்தக வலயத்தின் பிரதான நுழைவாயிலை நோக்கி நடக்கலானேன்.

பிரதான கொழும்பு பொருளாதார திணைக்களத்தின் பிரதான நுழைவாயிலில் நான் மயக்கமுற்று விழுந்தேன். நான் மீண்டும் சுயநினைவு பெற்றபோது நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன்.

கதைப்பதற்கே சிரமமாகவிருக்கின்றது. எனது கண்ணின் வலி தாங்கமுடியாததாகவிருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த இடது கண்ணினால் ஒன்றையும் பார்க்கமுடியாமலிருக்கின்றது. இக்கண்ணில்லாமல் என்னால் வேலை செய்யமுடியாது. எனது பெற்றோர்கள் சுகவீனமுற்றிருக்கின்றனர். எனது இளைய சகோதரியும் சுதந்திர வர்த்தக வலயத்தில் தான் தொழில்புரிகிறார். என்னைப் பராமறித்துக் கொள்வதற்காக 5 நாட்கள் ஓய்வெடுத்தமைக்காக, அம்மாதத்திற்கான முழுச்சம்பளமும் அவளுக்கு கொடுக்கப்படவில்லை.

எனது தொழிற்சாலையின் நிர்வாகம் என்னைப் பார்ப்பதற்கு வருகை தந்தபோது 200ரூபா(5 அமெரிக்க டொலர்கள்) க்களைத் தந்து எனக்குத் தேவையானவற்றை வாங்கசொன்னார்கள். அத்துட நான் காயமுற காரணமாகவிருந்த மேற்பார்வையாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் எனவும் கூறினார்கள்."

இப்பெண் இனி தன் வாழ்நாள் முழுவதும் பார்வயிழந்து துன்பப்படவேண்டியவளாகவிருக்கின்றாள். வெறும் 200,- ரூபாவுடன் நிர்வாகம் தனது வேலையை முடித்துக்கொண்டுவிட்டது. இத்தனை காலமும் அப்பெண் தன்னை வருத்தி அத்தொழிற்சாலைக்காக உழைத்ததன் பலன்? தன் கண்களை இழந்தது மட்டும் தானா? பெண்கள் தொடர்ந்தும் இப்படி கீழ்த்தரமாக நடாத்துவது எதிர்க்கப்படவேண்டும். சுதந்திரவர்த்தக வலயத்தில் தொழில்புரியும் பெண்கள் தொழிற்சங்களில் இணைந்து செயற்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் தங்கள் நியாயமான உரிமைகளுக்காக போராடுவதற்கான சுதந்திரமும் அற்ற நிலையிலேயே இருக்கின்றார்கள். இப்பெண்களின் நிலமைகளை வெறும் கோஷங்களாக மாத்திரம் உபயோகிக்காது, இவர்களது அவலங்களை உலகெங்கும் பரவலாக தெரியப்படுத்துவதோடு செயற்பாட்டிற்காக உணர்வுபூர்வமாக உழைக்கவேண்டும்.

( இப்பெண்ணின் சம்பவம் பற்றிய தரவுகள் யாவும் இலங்கையிலிருந்து வெளிவரும் "திவயின" பத்திரிகையில் வெளியான ஓர் கட்டுரையில் இடம்பெற்றவையே.)

### பெண்கள் சந்திப்பு

தனது ஒரு வருடத்தை பூர்த்தி செய்து கொண்ட பெண்கள் சந்திப்பின் 5வது நிகழ்ச்சி நொயில் நகரில் மே மாதம் 11ம் திகதி நடைபெற்றது.

முதலாவது சந்திப்பு தவிர்ந்த மற்றைய சந்திப்புக்களைவிட சற்று கூடுதலாகவே பெண்கள் வந்திருந்தனர். வந்திருந்தவர்களில் புதியவர்களும் அடங்குவர். அன்று காலை 11.30 மணியளவில் சுயஅறிமுகத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலாவதாக பெண்களும் ஐக்கியமும் என்ற தலைப்பின் கீழ் தேவிகா தனது கருத்துக்களைத் தெரிவித்தார். அதில் பெண்கள் ஐக்கியமாவதற்கு முதலில் அன்பும், நட்பும் தேவையெனக் கூறினார். இங்கு பெண்கள் வெவ்வேறு நகரங்களில் சிதறி வாழ்தல், குடும்ப வேலைகள், சமூகப்பார்வை என்பவற்றால் ஐக்கியம் சிறிது கஷ்டமாகவேயுள்ளதெனக் கூறியதோடு, பெண்ணடிமைக்கெதிராக குரல் கொடுக்க பெண்கள் முன்வரவேண்டுமெனவும் மேலும் கூறப்பட்டது. தொடர்ந்து விஜிதா தனது கருத்துக்களையும் தெரிவித்ததுடன், இவ்விருவரின் கருத்துக்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அடுத்து 'வீடும் வீதியும்'என்ற நாடகத்தின் நோக்கில் வந்திருந்தவர்களில் அநேகமானோர் அதை வாசிக்காமல் வந்தமையினால் அங்கு வாசிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டது.

பலர் காரசாரமான விமர்சனங்களை முன் வைத்தனர்.

அடுத்த நிகழ்ச்சியாக இனிவரும் சந்திப்பு கேர்ண நகரில் நடைபெறுமெனவும் அதற்கு 5 பேர் கொண்ட தற்காலிக செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. ஒரு வருடத்தை பூர்த்தி செய்ததையிட்டு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அம்மலரைப் பற்றிய நோக்கு அடுத்த சந்திப்பில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் மலர் வெளியிடவேண்டுமெனவும், இச்சந்திப்பிற்கு ஒரு யாப்பு, சின்னம் தேவையெனவும் தீர்மானிக்கப்பட்டது. நேரம் குறுகியதாக இருந்ததால் பெண்நிலைவாதம் பற்றிய கலந்துரையாடல் என்ற நிகழ்ச்சி நடைபெறவில்லை.

அன்றைய சந்திப்பு 5.30 மணியளவில் முடிவடைந்தது.

*மங்கையற்கரசி*

www.tamilarangam.net

# அகதியின் புலம்பல்

கனவுகளைக்
கற்பனைகளைக்
கவிதையில் வடிக்க
முடிந்தது.
வதைபட்டு
சிதைவுற்ற
நெஞ்சங்களுக்கு,
வழிசொல்ல முடியவில்லை.

வாழ்வதற்காய் போராடி,
போராட்டமே வாழ்வாக
வருடங்கள் விடைபெற்றனவே,
தவிர- அவலங்கள் தீரவில்லை.




மரணத்தின் வாடை
ஈழத்தில் மட்டுமல்ல,
உலகின் எல்லா
மூலைகளிலும்,
எல்லா வேளையிலும்.

அதிகார வர்க்கத்தின்
அரக்கத்தனம்
அடக்கப்படும் வரை,
அப்பாவி மக்கள்- சுவாசிக்க
வளியின்றி -சுவாசிக்காமலே,
துயில வேண்டியதுதான்.

நாம் துயில்வதற்கு
முன்னுள்ள சிறியகணத்தின்
துளியையாவது பயன்படுத்துவோமா?
பயனுள்ளவற்றிற்காக.

ரதி

www.tamilarangam.net



தளபதியாரே, தங்களது டாங்கி ஒரு பலம்பொருந்திய வாகனம்.
அதனால் ஒரு காட்டை முற்றாக அழிக்க முடிவதுடன்
நூற்றுக்கணக்கான மனிதர்களையும் நசுக்கமுடியும்.
ஆனால் அதனிடம் ஒரு தவறு உள்ளது:
அதற்கு ஒரு ஓட்டுனர் தேவைப்படுகிறது.

தளபதியாரே, தங்களது குண்டுவீச்சு விமானம் பலம் வாய்ந்தது,
அதனால் புயலை விடவும் வேகமாக பறக்கமுடிவதுடன் ஒரு
யானையை விடவும் அதிக பாரம் தூ க்கமுடியும்.
ஆனால் அதனிடம் ஒரு தவறு உள்ளது:
அதற்கு ஒரு இயந்திர நுட்பவியலாளர் தேவைப்படுகிறது.

தளபதியாரே, மனிதன் மிகவும் பிரயோசனமானவன்.
அவர்களால் பறக்கவும்முடியும், கொல்லவும் முடியும்.
ஆனால் அவனிடம் ஒரு தவறு உள்ளது:
அவனால் சிந்திக்க முடியும்.

பிறேஷ்ட்